**<u>சாட்சியின் வாக்குமூலம்</u>**

**<u>திருவள்ளூர் மாவட்ட முதன்மை மற்றும் அமர்வு நீதிமன்றம்</u>**

**<u>அசல் வழக்கு எண்</u> : 173/2013**

**DW2 – திருமதி.அமுல், க/பெ. பாபு**

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : | ஜாதி | : |
| தந்தை பெயர் | : | தொழில் | : |
| கிராமம் | : | சமயம் | : |
| வட்டம் | : | வயது | : |

**19.07.2023**

<u>சாட்சி பிரமாணம் செய்விக்கப்பட்டு வாதித் தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய அனுமதிக்கப்படுகிறார்</u>

**<u>வாதி தரப்பு குறுக்கு விசாரணை</u>**

எனது பூர்வீகமே புட்லூர் ஆகும். வாதி மற்றும் பிரதிவாதியை எனக்கு தெரியும். நான் 7ம் வகுப்பு வரை படித்துள்ளேன். எனது பிரமாண வாக்குமூலத்தில் உள்ள விவரங்களை நான் சொல்லித்தான் தயார் செய்தார்கள். எனது பிரமாண வாக்குமூலத்தில் உள்ள சங்கதிகள் எனக்கு தெரியும். இந்த வழக்கில் சீட்டு நடத்திய விவரங்களும் தெரியும். எனது வீட்டிற்கும் பிரதிவாதி வீட்டிற்கும் இடையே உள்ள தூரம் ஒரு 10 நிமிட நடை பயணத்தில் சென்றுவிடக்கூடிய தூரமாகும். வாதியையும் தெரியும். வாதி, பிரதிவாதியிடம் சீட்டு போட்ட விவரம் எனக்கு தெரியும். பிரதிவாதி சீட்டு பிடித்த வகையில் எனக்கு தெரியும். எனக்கு சாட்சியம் அளிக்க சம்மன் எதுவும் வரவில்லை. பிரதிவாதி மற்றும் சத்யா ஆகியோர்கள் சொல்லித்தான் சாட்சியம் அளிக்க வந்துள்ளேன். பிரதிவாதி மற்றும் சத்யாவை சுமார் 20 வருடங்களாக எனக்கு தெரியும். பிரதிவாதியிடம் ஒரு லட்ச ரூபாய்க்கு நான் சீட்டு போட்டுள்ளேன். கிஷோர், நட்சத்திரா, கணபதி ஆகியோர் என்னுடன் சேர்ந்து பிரதிவாதியிடம் சீட்டு எடுத்து பயன் அடைந்தார்கள். எனது

பிரமாண வாக்குமூலத்தில் 2வது பத்தியில் சொல்லியது போல் பிரதிவாதி கலாவதி எனக்கும் மற்ற மேற்சொன்ன பயனாளிகளுக்கும் பணம் கொடுக்கவில்லை என்றால் சரிதான். நாங்கள் அனைவரும் பிரதிவாதியின் வீட்டிற்கு சென்று கேட்டோம். அதன்காரணமாக பிரதிவாதி நடத்திய ஏலச்சீட்டில் நானும் மற்ற நபர்களும் பயன் அடையவில்லை என்றால் சரிதான். மற்ற நபர்களும் பணம் கிடைக்காமல் பிரதிவாதியால் பாதிக்கப்பட்டார்கள் என்று சொன்னால் எனக்கு அதுபற்றி தெரியாது. வாதி ஏலச்சீட்டில் சேர்ந்தார் என்றால் சரிதான். வாதி சரிவர பணம் கட்டாத விவரம் எனக்கு பிரதிவாதி சொல்லி தெரியும். எங்களுக்கு சேர வேண்டிய தொகையை பிரதிவாதியிடமும் சத்யாவிடமும் நாங்கள் போய் கேட்டோம். எங்களுக்கு பிரதிவாதி தொகை கொடுக்கவில்லை. நான் வாதியிடம் ஒருமுறை ஏல தவணை தொகையை செலுத்த சொல்லி கேட்டேன். வாதி மேற்படி தொகையை செலுத்த முடியாது என்று என்னிடம் கூறினார். அடியாட்களை வைத்து வாதி மிரட்டினார் என்று நான் பிரமாண வாக்குமூலத்தில் கூறிய விவரம் சத்யா சொல்லித்தான் எனக்கு தெரியும். வாதி என்னை அசிங்கமாகவும் அவதூறாகவும் பேசவில்லை. வாதி யார், யாருக்கு வட்டிக்கு பணம் கொடுத்தார் என்ற விவரம் எனக்கு தெரியாது. வாதி வட்டித்தொழில் செய்யவில்லை என்றாலும் நான் வழக்கிற்காக தவறாக சொல்கிறேன் என்றாலும் சரியல்ல. வாதி பணத்தை திரும்ப கொடுக்க தவறியவர்கள் சொத்துக்களை அபகரிப்பதாக எனது பிரமாண வாக்குமூலத்தில் சொன்ன விவரங்களில் அவ்வாறு யாரிடம் வாதி சொத்துக்களை அபகரித்தார் என்ற விவரம் எனக்கு நேரடியாக தெரியாது. மேற்படி விவரத்தை வழக்கிற்காக தவறாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. வாதி, பிரதிவாதியின் வீட்டிற்கு வந்து அசல் ஆவணத்தை எந்த தேதியில் அத்துமீறி எடுத்து சென்றார் என்று எனக்கு ஞாபகமில்லை. 2012 அல்லது 2013ம் வருடமாக இருக்கலாம். அவ்வாறு வாதி, பிரதிவாதி வீட்டிலிருந்து ஆவணம் எதுவும் எடுத்து செல்லவில்லை என்று சொன்னால் சரியல்ல. வாதியிடம் பிரதிவாதியும் அவரது தாயாரும் 24.04.2009 அன்று வாங்கிய கடனுக்காக வீட்டு பத்திரத்தை அவர்களாகவே செக்யூரிட்டிக்காக கொடுத்தார்கள் என்று சொன்னால் எனக்கு அதுபற்றி தெரியாது. பிரதிவாதி காவல்துறை கண்காணிப்பாளரிடம் புகார் கொடுத்தபோது நான் உடன் சென்றிருந்தேன். எந்த தேதியில் புகார் கொடுத்தார் என்று எனக்கு ஞாபகமில்லை. அந்த புகாரில் விசாரணை செய்தார்களா என்று எனக்கு தெரியாது. நான்

உண்மையிலேயே பிரதிவாதி உடன் புகார் கொடுக்க சென்றிருந்தால் விசாரணை செய்தார்களா என்ற விவரம் எனக்கு தெரிந்திருக்கும் என்றாலும் அவ்வாறு செல்லாததால் தெரியவில்லை என்று கூறுகிறேன் என்றால் சரியல்ல. தமிழ்செல்வி, சூரியகலா, எத்திராஜ் ஆகியோர்கள் என் ஊரைச்சேர்ந்தவர்கள். அவர்களை எனக்கு தெரியும். மேற்படி மூவரும் வாதி, பிரதிவாதிக்கு கடன் கொடுத்ததாக சொல்லப்படும் புரோ நோட்டில் சாட்சி கையெழுத்து செய்துள்ளார்கள் என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. என் பிரமாண வாக்குமூலத்தில் கூறியுள்ள விவரங்கள் உண்மைக்கு புறம்பானவை என்று சொன்னால் சரியல்ல. வாதி, பிரதிவாதிக்கு கடன் கொடுத்ததன் காரணமாக வாதி தரப்பில் கடனுறுதி சீட்டுக்களை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளார் என்று சொன்னால் எனக்கு தெரியாது. வாதி, பிரதிவாதிக்கு பணம் கொடுக்கவில்லை என்று நான் பிரமாண வாக்குமூலத்தில் சொல்லியுள்ள விவரம் தவறானது என்று சொன்னால் சரியல்ல. நான் பிரதிவாதிக்கு கடன் எதுவும் கொடுக்கவில்லை. பிரதிவாதியிடம் மேற்படி கடனை கேட்டு நான் பிரதிவாதியின் வீட்டிற்கு செல்லவில்லை, தகராறு எதுவும் செய்யவில்லை. பிரதிவாதி என்னிடம் அவருக்கு ஆதரவாக சாட்சியம் அளித்தால் கடன் தொகையை என்னிடம் திருப்பி தருவதாக கூறினார் என்று சொன்னால் சரியல்ல. வாதிக்கும் பிரதிவாதிக்கும் இடையில் நடந்த பணப்பரிமாற்றம் பற்றி எனக்கு எதுவும் தெரியாது என்றாலும் பிரதிவாதி கேட்டுக்கொண்டதற்கிணங்க அவருக்கு ஆதரவாக சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

Typed to my dictation and correction
by me in open court read over to the
witness and admitted by him as correct

Sd/- S.Selva Sundari
Principal District and Sessions Judge,
Tiruvallur.